கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.12/2023**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 26.03.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 26.03.2026 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | ஏழுமலை | வயது | 91 |
| தந்தை பெயர் | கோவிந்த நாட்டார் | கிராமம் | பரங்கிப்பேட்டை |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

12. பிரமாண வாக்குமூலத்தில் என்னை 14.09.2022 அன்று பதிவிநீக்கம் செய்ததாக கூறியுள்ளேன் என்றால் என்னை யாரும் பதிவிநீக்கம் செய்யவில்லை. 14.09.2022 ற்கு முன்பு கூடிய கூட்டங்களுக்கு தலைவராக நான் கூறிதான் கூட்டப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பு 06.05.2022, 13.05.2022, 21.06.2022, 12.08.2022, 15.08.2022 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட கூட்டங்களுக்கு நான் செல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை கோப்புகளை ஆராய்ந்தால் நினைவுகூற முடியும்.

13. என்னிடம் காட்டப்படுவது சங்கத்தின் தீர்மான புத்தகம் என்றால் சரிதான். சங்கத்தின் தீர்மான புத்தகமானது **பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் 06.05.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நான் இருந்ததற்கான கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான். 13.05.2022, 12.08.2022, 15.08.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நான் இருந்ததற்கான கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 14.09.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் என்னை நீக்கி தீர்மானம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.(சாட்சி தாமகவே முன்வந்து அந்த கூட்டம் என்னால் கூட்டப்படவில்லை என்று கூறினார்).

14. எனது வயதின் முதிர்வின் காரணமாக என்னால் கூட்டங்களை சரிவர

நடத்த இயலவில்லை என்பதனால் என்னை நீக்கியதற்கு 3ம் நபர் தூண்டுதலின் பெயரில் இவ்வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை சங்க தலைவர் பதவிலிருந்து நீக்கியதால் சங்கத்தின் வங்கி கணக்குகளை முடுக்குவதற்காகவும் 4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு சங்கத்தின் நிதியை தரக்கூடாது என்பதற்காக இவ்வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சங்கத்திற்கு எதிராக செயல்படுவதனால் நான் சங்க தலைவராக இருப்பதற்கு தகுதியற்றவர் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(Sd/- E.Swetha)
Additional District Munsif
Chidambaram